**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 60/2018 |
| Prosecution Witness | : | **அ.சா.**2 |
| Name | : | **வினோத்** |
| Father's / Husband Name | : | நாகையா |
| Address | : | **அம்மாபாளையம்** |
| Age | : | 42/2025 |

**தேதி : 17.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் அம்மாபாளையத்தில் வசித்து வருகிறேன். நான் அம்மபாளையத்தில் மளிகை கடை வைத்துள்ளேன். சாட்சிகள் மாதேஷ்வரன், ராமர், பிரபாகரன், தர்மராஜ், ஆகியோர்களை எனக்கு தெரியும். அ.சா.1 நாகராஜனை தெரியும். கடந்த 13.01.2018 அன்று காலை 4.00 மணிக்கு வெளிவாசல் செல்வதற்காக வெளியே வந்தபோது மாதேஷ்வரனின் கௌரி மளிகை கடை முன்பு சத்தம் கேட்டது. சத்தம் கேட்டு நான் அங்கு சென்று பார்த்தபோது கடையில் திருட வந்ததாக ஒரு நபரை கட்டிபோட்டு வைத்திருந்தார்கள். அவர் பெயர் வெங்கடாசலம் என்றும் லாடபுரத்தை சேர்ந்தவர் என்றும் சொன்னார்கள். அவரை பார்த்தால் என்னால்அடையாளம் காட்ட முடியும். சம்பவ இடத்தில் மாதேஷ்வரன், ராமர், நாகராஜன், பிரபாகரன், தர்மராஜ் மற்றும் நிறைய பேர்கள் இருந்தார்கள். சுமார் 4.30 மணி அளவில் போலீஸார் வந்து அந்த நபரை காவல் நிலையத்திற்கு அழைத்துசென்றார்கள். அதன்பிறகு மறுபடியும் காலை 8.30 மணி அளவில் பெரம்பலூர் போலீஸார் மாதேஷ்வரன் கடை முன்பு வந்து விசாரித்தார்கள்.

அந்த இடத்தை மேப் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அந்த இடத்தில் வைத்து அதற்காக நானும், சின்னசாமி என்பவரும் சாட்சிகையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகசர் அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அம்மாபாளையம் மெயின்ரோட்டிற்கு மேற்குபுறம் என்னுடைய மளிகை கடை உள்ளது. கிழக்குபுறம் மாதேஷ்வரனின் மளிகை கடை உள்ளது. என்னுடைய கடையை ஒட்டி என்னுடைய வீடு உள்ளது. நான் கையெழுத்து போட்டபோது போலீஸார் என்னிடம் ஏதாவது கேட்டார்களா என்றால் சம்பவத்தை பற்றி கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டபிறகு போலீஸார் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. போலீஸார் சம்பவ இடத்திற்கு காலை 8.00 மணிக்கு வந்தார்கள். போலீஸார் வந்தவுடன் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். மாதேஷ்வரன் அங்கிருந்தார் என்றால் சரிதான். சம்பவ இடத்தில்சுமார் 100 நபர்கள் இருந்திருப்பார்கள். வரைபடத்தில் என்னுடைய கடையை காட்டவில்லை. போலீஸார் யார் என்று தெரியவில்லை. நான் சம்பவ இடத்திற்கு காலை 4.00 மணிக்கு வரும்போது அங்கு எதிரியை கட்டிபோட்டு வைத்திருந்தார்கள். நிற்கவைத்து பின்பக்கமாக கையை கட்டிபோட்டு வைத்திருந்தார்கள். யார் கட்டினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

4.30 மணிக்கு போலீஸார் வந்து எதிரியை அழைத்துசென்றார்கள் என்றால் சரிதான். 4.30மணிக்கு எதிரியை அழைத்துசென்ற போலீஸார் வேறு, என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கிய போலீஸார் வேறு. 4.00 மணிக்கு நான்கடைக்கு சென்று பார்த்தபோது இரும்பு ராடு ஒன்று கிடந்தது. எதிரியை போலீஸார் அழைத்துசெல்லும்போது இரும்ப ராடையும் எடுத்துசென்றுவிட்டார்கள் என்று நினைக்கிறேன். நான் கையெழுத்து போட்டட தாளில் என்ன எழுதியிருந்தது

என்ற விவரம் எனக்கு தெரியும். எழுதிய தாளில் கையெழுத்து போட்டேன். எழுதிய தாளில் கொஞ்சம் இடம் விட்டு கையெழுத்து போட்டேனா என்றால் ஞாபகமில்லை. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால்சரியல்ல. மாதேஷ்வரன் எனக்கு தெரிந்தவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.